**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ம் நாள் திங்கள்கிழமை**

**ஐ.ஏ.எண்.2/2024**

**இன்**

**அ.வ.எண்.42/2015**

சௌந்திரவள்ளி மற்றும் 4 நபர்கள் ... மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள்

/எதிர்/

பர்வதவர்த்தினி மற்றும் 9 நபர்கள் ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இவ்வழக்கானது 06.08.2024–ம் தேதியில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுப்புராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.R.தாமோதர் ராஜ் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தில் விசாரணை இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 18 விதி 17 சிபிசி–ன் கீழ் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்காக ரீ–கால்(Recall) செய்து உத்தரவிடுமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u> :–**

i) மனுதார் அசல் வழக்கில் 2 ம்பிரதிவாதி எனவும், மற்ற 7, 8, 9 பிரதிவாதிகளுக்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கானது மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டு PW1 முதல் விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக கடந்த 22.04.2024 ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டியிருந்ததாகவும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று PW1 குறுக்கு விசாரணைக்கு ஆஜராகததால் 29.04.2024 ம் தேதியன்று மீண்டும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டியிருந்ததாகவும், இந்த சூழ்நிலையில் மனுதாரர்/2 ம்பிரதிவாதி உடல்நலக்குறைவு காணரமாக இருந்து வந்ததால், வழக்கறிஞரை சந்தித்து உரிய தகவல் அளிக்க முடியவில்லை எனவும், இதன் காரணமாக மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கடந்த 29.04.2024 தேதியன்று குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கேட்கப்பட்டபோது, நீதிமன்றம் ஷை குறுக்கு விசாரணையை முடித்து வைத்து Further Pws காக 03.06.2024 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டதாகவும்,

ii) கடந்த 29.04.2024 ம் தேதியன்று PW1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்கள்/2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் முதல் முறையாக மட்டுமே வாய்தா கேட்கப்பட்டியிருந்ததாகவும், அதேபோல் மனுதாரர்/2 ம்பிரதிவாதி வயோதிகத்தின் காரணத்தினாலும், உடல்நலக்குறைவின் காரணத்தினாலும் தனது வழக்கறிஞரை உரிய நேரத்தில் சந்தித்து தகவல்களை தெரிவிக்க முடியாததால் மட்டுமே குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டியிருந்ததாகவும், ஷை தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல எனவும்,

ஷை PW1 யை குறுக்கு விசாரணை செய்யாவிட்டால் மனுதாரர் தரப்பு நியாயத்தையும், உண்மையையும் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வாய்ப்பு இல்லாமல் போகும். மேலும் மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் எனவும், எனவே கடந்த 29.04.2024 ம் தேதியன்று PW1 யை குறுக்கு விசாரணை செய்வதை முடித்து கொண்டதை மீண்டும் விசாரணை செய்ய ரீகால் செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

i) அசல் வழக்கானது நீதிமன்றத்தில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு PW 1 முதல் விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 22.04.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது என்று சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சரி எனவும், பின்னர் PW 1ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்/2,3,7,8,9ம் பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 29.04.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது என சொல்லப்பட்டுள்ளது உண்மை எனவும், இந்நிலையில் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு உடல்நல குறைவு காரணமாக அவரது வழக்கறிஞரை சந்தித்து உரிய தகவல் அளிக்க இயலவில்லை என்பதும், இதன் காரணமாக அவரது வழக்கறிஞர் கடந்த 29.04.2024ம் தேதியன்று PW 1ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா கேட்கப்பட்டது என்றும், ஆனால் நீதிமன்றம் மேற்படி குறுக்கு விசாரணையை முடித்து வைத்து Further PWS–க்காக 03.06.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது பாதி உண்மை, பாதி பொய் எனவும், ஏனென்றால் வாதி தரப்பு சாட்சியான PW 1–ஐ 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் பல குறுக்கீடுகள் செய்யப்பட்டதன் மூலம் வழக்கு சம்மந்தமாக விவரங்கள் 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞருக்கு நன்கு தெரிந்துள்ளது என்பதுடன், அந்த சமயத்தில் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கீடுகளை வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் ஆட்சேபனை செய்யப்பட்டதும், நன்கு தெரிந்த விவரம் எனவும்,

ii) மேற்படி மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் PW 1–ஐ குறுக்கு விசாரணை செய்ய முடியாததற்கு சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும், மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு உடல்நல குறைவு ஏற்ப்பட்டதாக சொல்லப்பட்டதில் என்னவிதமான உடல்நல பாதிப்பு என்ற விவரங்கள் ஏதும் அபிடவிட்டில் சொல்லப்படவில்லை என்பதால் அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நம்பதகுந்த காரணங்கள் அல்ல என்பதுடன், ஏதோ காரணம் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டதாகும். இந்த காரணங்களுக்காகவும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

iii) மேற்படி அசல் வழக்கானது ஏற்கனவே மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தொடர்ந்து காலம் கடத்தி வந்த விவரங்கள் நீதிமன்ற கோப்பின் B டைரியை பார்த்தாலே உண்மை தெரியவரும். ஏனென்றால் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 2015ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டதாகவும், மேற்படி எதிர்வழக்குரையை காணவில்லை என்ற விவரம் கடந்த 2019ம் ஆண்டு தான் 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டதாகவும், மேற்படி எதிர்வழக்குரையை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்றும், அதன் நகலை கடந்த 23.06.2023ம் தேதியன்று தாக்கல் செய்து மேற்படி அசல் வழக்கினை காலம் கடத்தி வந்ததுடன் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு தாவா வழக்கு சம்மந்தமாக எதிர்வாதம் செய்ய போதிய காரணங்கள் இல்லை என்பதால் அசல் வழக்கினை காலம் கடத்தி வந்த காரணத்திற்காகவும், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.எனவே எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>பிரச்சினை</u> :–**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5) **<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு அசல் வழக்கில் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்வதற்காக 22.04.2024ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும், அதன்பின்பு 29.04.2024ம் தேதி வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்வதற்காக மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரர்/2,3,7,8,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்/2,3,7,8,9 பிரதிவாதிகள் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்வதற்காக ரீ–கால் செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அதேவேளையில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், வா.சா.1 யை 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பல குறுக்கீடு செய்ததாகவும், அதனால் வழக்கு விபரம் அனைத்தும் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு நன்கு தெரியும் எனவும், இதற்கு மாறாக மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் 29.04.2024ம் தேதி வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்/2ம் பிரதிவாதி வழக்கறிஞரை சந்தித்து உரிய தகவல் கொடுக்கவில்லை என சொல்லியிருப்பது ஏற்கக்கூடியதல்ல எனவும், மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதில் என்ன பாதிப்பு விபரம் என அபிடவிட்டில் சொல்லப்படவில்லை எனவும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி ஆட்சேபிக்கப்பட்டது.

8) மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட எதிர் எதிர் சங்கதிகளை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் வா.சா.1 யை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு, மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்தா ஏற்பட்டும் முன்வராததால், 29.04.2024ம் தேதி மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் PW1 குறுக்கு விசாரணையை இந்த நீதிமன்றம் முடித்து வைத்துள்ளது. அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்யாததற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணம் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் வழக்கறிஞரை சந்தித்து உரிய விபரங்கள் சொல்லப்பட முடியவில்லை என சொல்லப்பட்டுள்ளது. அதேவேளையில், மேற்படி மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு அன்றைய தினம் உடல்நலக்குறைவு ஏற்பட்டதற்கு எந்தவித ஆவணங்களும், விபரங்களும் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் அபிடவிட்டில் சொல்லவில்லை என ஆட்சேபிக்கப்பட்டிருந்தாலும், இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், இயற்கை நியதியின் அடிப்படையில் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பளித்தால் தான் அசல் வழக்கில் இறுதியான முடிவினை தீர்மானம் செய்ய முடியும்.

9) மேலும், இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், இந்த மனுவை அனுமதித்து மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பிற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதினால்

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எந்தவொரு பாதகமும் ஏற்படப்போவதில்லை. எனவே நீதியின் நலனை கருத்தில்கொண்டு மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1யை நீதிமன்றத்தில் ஆஜரான அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்பதோடு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வரும் 23.08.2024ம் தேதியோ, அல்லது அதற்கு முன்போ செலவுத்தொகையாக ரூ.1000/-யை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும். தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.**

**அழைக்க 23.08.2024**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :-** **இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> :-** **இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u> :-** **இல்லை**

Sd/S.Ilayaraja,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 2/2024
இன்
அ.வ.எண்.42/2015
நேரிய/வரைவு உத்தரவு
நாள்: 19.08.2024